பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 02 ஞாயிற்றுக்கிழமை 16.05.2021 கதிர் 58

## 306 பேர் கைது!

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 306 பேர் கடந்த 24 மணிநேரத்துக்குள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

அத்துடன், தனிமைப்படுத்தல் சட்டம் அமுலுக்கு வந்த காலப்பகுதி முதல் இதுவரை 9 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அந்தச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில்

☞2

# நாளை அதிகாலை தளர்கிறது முழு நேரப் பயணக் கட்டுப்பாடு

* இரவு நேரப் பயணக் கட்டுப்பாடு மே 31ஆம் திகதி வரை தொடரும்
* மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடையும் தொடர்ந்து அமுல்



(ந.லோகதயாளன் )

இலங்கையில் கடந்த வியாழக்கிழமை இரவு 11 மணி முதல் அமுலுக்கு வந்திருந்த மூன்று நாள் முழு நேரப் பயணக் கட்டுப்பாடு நாளை அதிகாலை 4 மணி முதல் தளர்த்தப்படும்.

- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான ஜனாதிபதி செயலணியின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா இன்று தெரிவித்தார்.

☞2

## நாளை முதல் அமுலுக்கு வரும் அடையாள அட்டை நடைமுறை

### பொலிஸ் பேச்சாளர் அறிவிப்பு



நாட்டில் கடந்த 13 ஆம் திகதி இரவு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தொடர் முழு நேரப் பயணத் தடை நாளை அதிகாலை 4 மணிக்கு தளர்த்தப்படவுள்ளது. அதன் பின்னர் தேசிய அடையாள அட்டை நடைமுறை அமுலுக்கு வரும்.

- இவ்வாறு பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

☞2

## சுகாதார ஆலோசனையைப் பின்பற்றினால் 3 வாரங்களுக்குள் கொரோனாவுக்கு முடிவு

### இராணுவத் தளபதி அதீத நம்பிக்கை

கொழும்பு, மே 16

இலங்கையில் எதிர்வரும் 2 - 3 வாரங்களுக்கு மக்கள் சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றிச் செயற்பட்டால் கொரோனா வைரஸ் தொற்றின் மூன்றாவது அலையைக் கட்டுப்படுத்த முடியும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றிய குறைவான அறிகுறிகளை வெளிக்காட்டும் நோயாளிகளுக்கு வீடுகளில் வைத்து சிகிச்சை அளிப்பது தொடர்பான வழிகாட்டல்கள் எதிர்வரும் சில தினங்களில் சுகாதார சேவைகள் பணிப்பாளரால் வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## நாளை முதல் அமுலிலுள்ள மேலும் சில நடைமுறைகள்

நாட்டில் நாளை முதல் அமுலிலுள்ள மேலும் சில நடைமுறைகளைக் கொரோனா தடுப்புக்கான ஜனாதிபதி செயலணி அறிவித்துள்ளது.

அவை வருமாறு:-

திருமண நிகழ்வுகளை நடத்த முடியாது. பதிவுத் திருமணம் செய்வதாக இருந்தால் பதிவாளர், சாட்சியாளர்கள் உட்பட 15 பேர் மட்டுமே பங்கேற்க முடியும். வெளியாட்களை அழைக்க முடியாது.

கொரோனா அல்லாத மரணங்கள் இடம்பெற்றால் இறுதிக்கிரியைகள் 24 மணிநேரத்துக்குள் நடைபெற வேண்டும். 15 பேர் மட்டுமே பங்கேற்க முடியும்.

பொதுப்போக்குவரத்து சேவையில்

☞2

## கொரோனாத் தொற்றாளர்களுக்கு வீட்டில் சிகிச்சையளிப்பதால் பிரச்சினை ஏற்படும்

### பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு வீட்டில் சிகிச்சையளிப்பது பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட போதிலும், நோய் அறிகுறிகள் காட்டாத நோயாளர்கள் நாளை முதல் வீட்டிலேயே இருந்து சிகிச்சை பெற அனுமதிக்கப்படுவர் என்று ஆரம்ப சுகாதார இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்திருந்தார். இவ்வாறு வீட்டிலிருந்து சிகிச்சை பெறுபவர்கள் கொரோனாக்

☞2



## அடுத்தடுத்து சாவடையும் கர்ப்பிணிகள்

இலங்கையில்கொரோனாவைரஸ்தொற்றுக்குள்ளாகி மேலும் ஒரு கர்ப்பிணிப் பெண் உயிரிழந்துள்ளார்.

திஸ்ஸமஹாராம பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய கர்ப்பிணிப் பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மாலேபே நெவில் பெர்ணான்டோ மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று மருந்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

☞2

## விபச்சாரத்தில் ஈடுபட்ட 3 பெண்கள் சிக்கினர்

### 2 ஆண்களும் மாட்டினர்



மொரட்டுவப் பகுதியில் இயங்கி வந்த விபச்சாரநிலையமொன்றைச் சுற்றிவளைத்த பொலிஸார், விபச்சாரத்தில் ஈடுபட்டு வந்த மூன்று பெண்களையும், அங்கு வந்திருந்த இரு ஆண்களையும் கைதுசெய்துள்ளனர்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக கடந்த 13ஆம் திகதி இரவு முதல் நாடு முழுவதும்

☞2

## அறிகுறிகள் இருந்தால் தடுப்பூசி ஏற்ற வராதீர்!

### சுதத் சமரவீர அறிவுறுத்து

கொரோனா வைரஸ் தொற்றுக்கான நோய் அறிகுறிகள் இருப்பவர்கள், கொரோனாத் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள தகுதியற்றவர்கள் என்றும், அறிகுறிகள் காணப்படுமாயின் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள வர வேண்டாம் என்றும் தொற்று நோய்பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

எனவே, இவ்வாறு தொற்றுக்குள்ளானவர்கள் தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதில் எவ்வித பலனும் இல்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## நாளை முதல் அமுலிலுள்ள .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆசன எண்ணிக்கைகளுக்கு அமைவாக பயணிகளுக்கு அனுமதி. வாடகை வாகனங்களில் சாரதியுடன் இரண்டு பேர் மாத்திரமே பயணிக்க முடியும்.

அமைச்சின் செயலாளரின் சுற்று நிருபத்துக்கு அமைவாகவே அரச நிறுவனங்களில் செயற்பாடு.

தனியார் நிறுவனங்களில் குறைந்த பட்ச ஊழியர்கள் மற்றும் வீட்டிலிருந்து கடமையாற்றும்வசதிகளுடன்பணிகளை முன்னெடுக்கலாம்.

அவசியக் கூட்டங்கள் 10 பேருடன் மட்டுப்படுத்தப்பட வேண்டும். செயலமர்வுகள், மாநாடுகளுக்கு அனுமதியில்லை.

சில்லறைக் கடைகள், பல்பொருள் அங்காடிகள், கடைத் தொகுதிகள், சந்தைகள், பொருளாதார மத்திய நிலையங்கள் மற்றும் வங்கிகளின் இட வசதியில் 25 வீதமானோருக்கே அனுமதி.

பேக்கரி, வீதியோரக் கடைகள், அழகுசாதன நிலையங்களில் இட வசதியின் பிரகாரம் 25 வீதமானோருக்கே உட்பிரவேச அனுமதி.

பராமரிப்பு நிலையங்கள், பாலர் வகுப்புகள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் வகுப்புகள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன.

வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பும் இலங்கையர்கள், இரட்டைப் பிரஜாவுரிமையுடையோர், வெளிநாட்டவர்கள், இராஜதந்திரிகள் 14 நாள்கள் தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டியது கட்டாயம்.

வெளியே வருபவர்கள் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு, சாரதி அனுமதி பத்திரத்தை கைவசம் வைத்திருக்க வேண்டும். தேசிய அடையாள அட்டை இல்லாதபட்சத்திலேயே கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப் பத்திரங்களை பயன்படுத்த முடியும். அதேவேளை, கர்ப்பிணிப் பெண்கள், இருதய நோயாளிகள் உட்பட அத்தியாவசிய தேவை நிமித்தம் வைத்தியசாலைகளுக்குச் செல்பவர்களுக்கும் இந்நடைமுறை பொருந்தாது.

## விபச்சாரத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடைக்கு மத்தியிலும் மிகவும் சூட்சுமமான முறையில் இவர்கள் விபச்சாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமையவே பொலிஸார் அவர்களைக்கைதுசெய்துள்ளனர்என்றுபொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

## நாளை அதிகாலை ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அத்துடன் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் மக்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கு அவர் நன்றியையும் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா வைரஸ் தொற்று நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக நீண்ட வார இறுதி விடுமுறை என்பதால் கடந்த 13ஆம் திகதி இரவு 11 மணி முதல் 17ஆம் திகதி அதிகாலை 4 மணி வரையிலும் மூன்று நாள்களுக்கு முழு நேரப் பயணக் கட்டுப்பாட்டை விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இதன்படி முன்னர் அறிவித்தவாறு நாளை அதிகாலை முதல் அந்த கட்டுப்பாடு நீக்கப்படும்.

எவ்வாறாயினும் முழுநேரப் பயணக் கட்டுப்பாட்டை நீக்கினாலும் மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகள், இரவு நேரப் பயணக் கட்டுப்பாடுகள் (இரவு 11 மணி முதல் அதிகாலை 4 மணி வரை) மே 31ஆம் திகதி வரையில் அமுலில் இருக்கும். - என்றார்.

## அடுத்தடுத்து .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்த நான்காவது கர்ப்பிணிப் பெண் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொரோனாத் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கட்டுப்பாட்டு நிலையத்தால் தொடர்ந்தும் கண்காணிக்கப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

இந்நிலையில், வீடுகளில் வைத்து சிகிச்சையளிப்பதற்குப் போதியளவு உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாததால் பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்த யோசனை முன்வைக்கப்பட்ட சகல சந்தர்ப்பங்களிலும் தமது தரப்பிலிருந்து சில கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வீடுகளில் தனிமைப்படுத்தப்படுகின்றவர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கான வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது.

அத்துடன், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களில் போக்குவரத்துப் பிரச்சினைகள் காணப்படுவதோடு, தொடர்ந்தும் பழைய வாகனங்களே பயன்படுத்தப்படுகின்றன.

இதேவேளை, வீடுகளில் தனிமைப்படுத்தப்படுகின்றவர்களுக்கு, அவசர தேவைகளுக்கு வழங்குவதற்கான போதிய மருந்துப் பொருள்களும் வைத்திய அதிகாரி அலுவலகங்களில் இல்லை - என்றார்.

## நாளை முதல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாளை தொடக்கம் எதிர்வரும் 31ஆம் திகதி வரை இரவு 11 மணி முதல் அதிகாலை 4 மணி வரை இரவு நேரப் பயணக் கட்டுப்பாடு அமுலில் இருக்கும். இந்த நேரங்களைத் தவிர்த்து ஏனைய நேரங்களில் (அதிகாலை 4 மணி முதல் இரவு 11 மணி வரை) தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கத்தின் அடிப்படையிலேயே பொதுமக்கள் வீட்டிலிருந்து வெளியேற முடியும்.

அத்தியாவசிய சேவையை முன்னெடுப்பவர்கள், தொழிலுக்குச் செல்லும் அரச மற்றும் தனியார் துறையினருக்கு குறித்த காலப்பகுதியில் இந்த நடைமுறை பொருந்தாது. பொருள்கள் கொள்வனவு உட்பட இதர விடயங்களுக்காக வீட்டிலிருந்து வெளியே வருபவர்களுக்கே இந்த நடைமுறை பொருந்தும்.

தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கம் ஒன்றை எண்ணாக இருந்தால் (1,3,5,7,9) ஒன்றை இலக்க நாளில் வெளியே செல்லாம். உதாரணமாக நாளை (17) செல்லாம். இரட்டை இலக்க நாளாக இருந்தால் (2,4,6,8) இரட்டை இலக்க நாளிலே வெளியே செல்லாம். உதாரணமாக நாளைமறுதினம் (18) வெளியில் செல்ல முடியும். பூஜ்ஜியம் (0) இலக்கமும் இரட்டை எண்ணாகவே கருதப்படும்.

இதேவேளை, எதிர்வரும் 31ஆம் திகதி வரை மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடையும் அமுலில் இருக்கும் - என்றார்.

## 306 பேர் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்- 076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கொரோனாத் தடுப்புக்கான சட்டமூலம் எப்போது வரும்!

கொரோனாத் தொற்று உச்சத்தை எட்டியுள்ளது. அதன் – கண்ணுக்குத் தெரியாத நுண்மியின் – வீரியத்துக்கு முகம் கொடுக்க முடியாமல் நாடுகள் துவண்டு போய்க் கிடக்கின்றன.

கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு எனப் புதிதாக கட்டுப்பாடுகள், விதிமுறைகள், ஒழுங்குமுறைகள் அறிவிக்கப் படுகின்றன. அவற்றை மீறுவோர் மீது நடவடிக்கைகள் பாய்கின்றன.

'கொரோனா கட்டுப்பாட்டின் விதிகளை மீறிய இத்தனை நூறு பேர் வளைத்துப் பிடிக்கப்பட்டனர். பொலிஸ் நிலையங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களுக்கு எதிராக வழக்குகள் தொடுக்கப்படவுள்ளன.' – என்றெல்லாம் தினசரி அறிவிப்புகள் வருகின்றன.

முகக் கவசம் உரிய முறையில் அணியாதவர்கள் பொலிஸாரால் குண்டுக் கட்டாக – அதிரடியாக – தூக்கிச் செல்லப்பட்டனர் என்ற செய்திகள் ஒவ்வொரு நகரத்திலிருந்தும் வந்து கொண்டிருக்கின்றன.

அதைச் செய்ய வேண்டாம் என பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்கிரமரத்ன தொடக்கம் பொலிஸ் பேச்சாளர் வரை கூறியும் பலனில்லை. சில இடங்களில் தங்களைக் குண்டுக் கட்டாகத் தூக்க வந்தமையை ஆட்சேபித்த பொதுமக்கள் சம்பந்தப்பட்ட பொலிஸாரால் நையப்புடைக்கப்பட்டிருக்கின்றனர். யாழ்ப்பாணம் சிவன் கோவிலடியில் கூட அப்படி ஒரு சம்பவம் சில தினங்களுக்கு முன்னர் நடந்திருக்கின்றது.

கொரோனாக் கட்டுப்பாட்டு விதிமுறைகள், ஒழுங்கு முறைகளை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கையில் மருத்துவ, சுகாதார ஊழியர்கள் மட்டுமன்றி முப்படையினர், பொலிஸார், சுகாதாரத் தொண்டர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கிராம சேவையாளர்கள் எனப் பல தரப்பினரும் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால், இவர்கள் எவரும் இந்த விடயங்களைக் கையாள்வதற்கான சட்டரீதியான – ஒழுங்கு முறையான – அதிகாரங்களைப் பெற்றவர்கள் அல்லர் என்பதுதான் உண்மை – யதார்த்த – நிலைமையாகும்.

நாட்டில் கொரோனா கால்பதித்து ஒன்றரை வருடங்களாகிவிட்டன. ஆனால் கொரோனாத் தொற்று விடயங்களைக் கையாள்வதற்கான எந்த விசேட சட்டங்களும் இலங்கையின் நாடாளுமன்றத்தில் அரசினால் சமர்ப்பிக்கப்படவேயில்லை.

இலங்கையில் தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தல் தொடர்பாக நடைமுறையில் இருக்கும் தனிமைப்படுத்தல் சட்டங்கள் பிரிட்டிஷ் காலத்தவை. சுதந்திரத்திற்கு முந்தியவை. நூறாண்டு பழமையானவை. இப்போதைய காலத்துக்குப் பொருத்தமற்றவை.

புதிய சட்டங்களை விரைந்து கொண்டு வந்து நிறைவேற்றுவது அவசியமானது; அத்தியாவசியமானது; அவசரமானது.

ஆனால் கோட்டாபய அரசாங்கத்துக்கோ அது குறித்துக் கவலையே இல்லை. தினசரி விடுக்கும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் விடயங்களைக் கையாளலாம் என்று கருதி அது செயற்படுகின்றது. சாக்குகளை ஒன்று சேர்ந்து சூரியனையே மூடி மறைத்து விடலாம் என்று கருதி மேற்கொள்ளப்படும் மூடத்தன முயற்சி போன்றது இது.

கடந்த வாரம் சபாநாயகர் தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் விவகாரக் குழுக் கூட்டத்திலும் இந்த விடயத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதி ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரசாங்கம் இந்த விடயத்தில் தொடர்ந்து தவறிழைத்து வருவதால் பார்த்திருந்து, காத்திருந்து விட்டு, இது விடயத்தில் தாமே விசேடமாக ஒரு தனிநபர் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கின்றமையை சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

அதற்கு எதிராக உரிய காலத்தில் யாரும் உயர்நீதிமன்றத்தில் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. எனவே, அரசே அதனை ஒரு சட்டமூலமாக முன்னெடுத்து முன்மொழிந்தால் அந்தச் சட்டமூலத்தை மிகக் குறுகிய காலத்தில் நிறைவேற்ற முடியும். கொரோனாவைக் கையாள உரிய சட்டம் நாட்டுக்குக் கிடைத்தாகும் என்று சுமந்திரன் குறிப்பிட்டார்.

அதற்கு நீதியமைச்சர் அலி சப்ரி பதிலளித்துள்ளார்.

"சுமந்திரன் சமர்ப்பித்தது கொரோனாவுக்கான விசேட சட்ட மூலம் அல்ல. பொதுவாக எல்லாத் தொற்று நோய்களையும் கையாள்வதற்கான நோக்கம் கொண்ட பொதுச் சட்டமூலமே. எனினும் கொரோனாத் தொற்றைக் கையாள்வதற்கான விசேட சட்ட மூலம் ஒன்று தயாரிக்கப்பட்டு சுகாதார அமைச்சின் கவனத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த அமைச்சின் பரிந்துரைக்கேற்ப அந்தச் சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என நீதியமைச்சர் குறுக்கிட்டுக் கூறியுள்ளார்.

அந்தச் சட்டமூலம் எப்போது வரும்? பொறுத்திருந்து பார்ப்பதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை.

### விசாரணைகள் முழுமையடையாதமையால்

## ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்குக் குற்றப்பத்திரிகை தன் பதவிக்காலத்தில் தாக்கல் செய்ய முடியவில்லை

### சட்டமா அதிபர் வேதனை



விசாரணைகள் முழுமையடையாதமையால், பதவியில் இருந்த காலத்தில் ஈஸ்டர் தாக்குதலை நடத்தியவர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய முடியாமல் போனது என சட்டமா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்ற சனிக்கிழமை இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அந்தத் திணைக்கள ஒருங்கிணைப்பு அதிகாரி நிஷார ஜெயரத்ன தெரிவித்தார்.

2019 ஏப்ரல் 21 தாக்குதல்களுடன் தொடர்புடைய அனைத்து சந்தேக நபர்கள் மீதான விசாரணையை சி.ஐ.டி. இன்னும் முடிக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக ஏ பிரிவில் 42 சந்தேக நபர்களுக்கு எதிரான சாட்சியங்களை உறுதிப்படுத்துமாறு விளக்கம் கோரி சட்டமா அதிபர் பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் 71 சந்தேக நபர்களைத் தவிர, 2019 ஏப்ரல் 21 தாக்குதல்கள் தொடர்பாக வேறுயாரும் விசாரணைக்கு உட்படுத்தப் படுகின்றார்களா என்றும் அவர் பொலிஸ்மா அதிபரிடம் கோரியுள்ளார்.

## சட்டமா அதிபரின் அறிவிப்பு தொடர்பில் சி.ஐ.டியிடம் அறிக்கை பெறப்படவுள்ளது

### என்கிறார் சரத் வீரசேகர



தனது பதவி காலத்தினுள் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் சந்தேகநபர்கள் மற்றும் தாக்குதல் நடத்தியவர்களுக்கு எதிராக தன்னால் குற்றப்பத்திரிக்கையை தாக்கல் செய்ய முடியாதுள்ளதாக சட்டமா அதிபர் நேற்றை தினம் பொதுமக்களுக்கு அறிவிப்பு ஒன்றை விடுத்திருந்தார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகள் இதுவரையில் முழுமை பெறாத காரணத்தால் தனக்கு இவ்வாறு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய முடியாது என அவர் அறிவித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் இருந்து அறிக்கை ஒன்றை பெற்றுக் கொள்ளவுள்ளோம் என அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

## வட்ஸ்அப் பயனர்களுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை

இலங்கையில் உள்ள வட்ஸ் அப் பயனர்கள் செயலியை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் ஒரு மோசடி தொடர்பாக எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையகமும் பொதுமக்கள் தங்கள் வட்ஸ் அப் கணக்கைப் பாதுகாக்க இரண்டு காரணி அங்கீகாரத்தை செயற்படுத்துமாறு கோரியுள்ளது.

உங்களுக்கு 6 இலக்கக் குறியீடு தவறுதலாக அனுப்பப்பட்டிருப்பதைக் குறிப்பிட்டு ஒரு வட்ஸ் அப் செய்தியைப் பெற்றால் அதற்குப் பதிலளிக்க வேண்டாம். அறியப்பட்ட தொடர்பிலிருந்து செய்திகள் வந்தால், அவர்களின் கணக்கும் உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

அத்துடன் வட்ஸ் அப் கணக்கைப் பாதுகாக்க 2 காரணி அங்கீகாரத்தை இயக்குமாறு இலங்கை தொலைத்தொடர்புகள் ஆணையகம் பயனர்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

## கஹதுடுவ பகுதியில் விபத்து: இராணுவ சிப்பாய் ஒருவர் சாவு

கஹதுடுவ – கொரலீம பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இராணுவ சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன், ஒருவர் படுகாயமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கஹதுடுவ பொலிஸார் இதனைத் தெரிவித்துள்ளனர். குறித்த மோட்டார் சைக்கிள் வீதியிலிருந்து விலகி கம்பம் ஒன்றுடன் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இரண்டு வீரர்களும் பனாகொட இராணுவ முகாமில் இணைக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். படுகாயமடைந்த இரு வீரர்களையும் வெதாரா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும் வழியில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

23 வயதான இராணுவ சிப்பாய் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆஸி புகலிடக்கோரிக்கையாளர்கள் உடனடியாக நேர்முகத்திற்கு அழைப்பு

ஆஸ்திரேலியாவில் புகலிடக்கோரிக்கையாளர்களின் பாதுகாப்பு விண்ணப்பங்களின் பரிசீலனைக்காக பல ஆண்டுகளாக காத்திருந்த நிலையில் திடீரென இவ்வாறு இரண்டு வாரங்களில் நேர்முகம் என்று அழைப்பு வந்துள்ளமை கவலை அளிக்கின்றது என புகலிடக் கோரிக்கையாளர்களின் வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த குறுகிய அவகாசத்தில் புகலிடக் கோரிக்கையாளர்கள் தங்களுக்கு தேவைப்படும் சட்ட ஆலோசனைகள் மற்றும் உதவிகளை பெற்றுக்கொள்வது கடினம் என்றும், போதுமான சட்ட உதவிகளின்றி அவர்களால் தங்களின் பாதுகாப்புக் கோரிக்கைகளை சரிவர விளங்கப்படுத்த முன்வைக்க முடியாது எனவும், அகதிகளுக்காக இலவச சட்ட ஆலோசனைகள் மற்றும் உதவிகள் வழங்கி வரும் நிறுவனமான Refugee Advice and Casework Services (RACS) தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜூன் 30ஆம் திகதிக்குள் சுமார் ஆயிரத்துக்கு அதிகமான புகலிடக்கோரிக்கையாளர்களுக்கான பாதுகாப்பு விசாவிற்கான நேர்முகத் தேர்வை முடிக்க உள்துறை அமைச்சகம் திட்டமிட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நேர்முகங்கள் தொலைபேசி அல்லது காணொலி வழியாக நடைபெறவுள்ளதால் நேர்முகத்தில் பங்குபெறும் புகலிடக்கோரிக்கையாளர்களால் தங்களின் தாய்நாட்டில் அனுபவித்த உயிர் அச்சுறுத்தல் சம்பவங்களை உரைபெயர்ப்பாளர்களின் உதவியுடன் நேர்முகம் செய்யும் குடிவரவு அதிகாரியிடம் விரிவாக கூறி ஏற்றுக்கொள்ள வைப்பது கடினம் எனவும் சொல்லப்படுகிறது. ஆனால் குடிவரவு சட்டங்களுக்கு அமையவே அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## ரெம்டெசிவிர் மருந்துகள், ஒக்சிசன் சிலிண்டர்கள்

# கள்ளச்சந்தையில் விற்பவர் மீது குண்டர் சட்டம் பாயட்டும்! முதல்வர் மு.க.ஸ்டாலின் காவல்துறையினருக்கு உத்தரவு

‘ரெம்டெசிவிர் மருந்துகள் மற்றும் ஒக்சிஜன் சிலிண்டர்களைப் பதுக்கி அதிக விலைக்கு கள்ளச்சந்தையில் விற்பவர்கள் மீது குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும்’ என்று தமிழக காவல்துறைக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில், மக்களின் உயிர்காக்கும் பெரும்பொறுப்பை முதன்மைக் கடமையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது, எனது தலைமையிலான தமிழ்நாடு அரசு. அதற்கு நேர் எதிராக செயல்படுபவர்களின் போக்கை கடுமையான நடவடிக்கைகளால் கட்டுப்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

எளிய மக்கள் கூட தங்கள் அன்றாட வாழ்வாதாரத்தில் ஏற்படும் பாதிப்பைத் தாண்டி, அரசின் உத்தரவுக்குக் கட்டுப்பட்டு, ஊரடங்கு எனும் கசப்பு மருந்தைவிழுங்கி, மக்களின் உயிரைக் காப்பதற்கு ஒத்துழைப்பு அளிக்கிறார்கள். அதேநேரத்தில், சில சமூக விரோதிகள் ரெம்டெசிவிர் மருந்துகளைப் பதுக்கி, கள்ளச்சந்தை யில் மிக அதிக விலைக்கு விற்பனை செய்கிறார்கள். அதுபோலவே, ஒக்சிஜன் சிலிண்டர் களையும் மிக அதிக விலைக்கு ஆங்காங்கே சிலர் விற்பது தொடர்பான குற்றச்சாட்டுகளும் வருகின்றன. பேரிடர் காலத்தில் இத்தகைய செயல்களில் ஈடுபடுவது மிகக் கடுமையான குற்றமாகும். தடுப்பூசி இறக்குமதி, ‘ரெம்டெசிவிர்’ மருந்து விநியோகம், ஒக்சிஜன் உற்பத்தி, படுக்கைகள் எண்ணிக்கை அதிகரித்தல், கட்டுப்பாட்டு மையங்கள் வாயிலாக உடனுக்குடன் சிகிச்சைக்கான ஏற்பாடு எனதமிழக அரசு



தொய்வின்றி தொடர்ச்சியாக பல்வேறு முயற்சிகளை மேற் கொண்டு வருகிறது. தமிழ்நாட்டில் வாழும் ஒவ்வொரு வரின் உயிரின் மீதும் அக்கறை கொண்டு எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வரும் நிலையில், அதற்கு மாறாக, ‘ரெம்டெசிவிர்’ மருந்துகளை பதுக்குவோர் மீதும், ஒக்சிஜன் சிலிண்டர்களின் விலையை உயர்த்தி விற்பனை செய்வோர் மீதும் குண்டர் சட்டத்தின் கீழ் கடும் நடவடிக்கை எடுக்க காவல்துறைக்கு உத்தரவிட்டுள்ளேன் என்று தெரிவித் துள்ளார்.

# கொரோனா இறப்பில் உண்மையான எண்ணிக்கை மறைக்கப்படுகிறதா?


## விளக்கம் கோருகிறது காங்கிரஸ் கட்சி!

குஜராத் உள்ளிட்ட மாநிலங்களில் கொரோனாவால் உயிரிழப்போரின் எண்ணிக்கை குறைத்துக் காட்டப்படுவதாக காங்கிரஸ் கட்சி புகார் கூறியுள்ளது.

காங்கிரஸ் மூத்த தலைவர்கள் ப.சிதம்பரம், சக்தி சிங் கோலி ஆகியோர் டெல்லியில் நேற்று கூட்டாக ஊடகவியலாளர்களைச் சந்தித்தனர். அப்போது பேசிய அவர்கள், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டில் குஜராத்தில் இறப்பு இரு மடங்காகியுள்ளது. மார்ச் 1 முதல் முதல் கடந்த 10 வரையில், ஒரு லட்சத்து 23 ஆயிரம் இறப்புச் சான்றிதழ்கள் குஜராத்தில் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டின் இதே காலத்தில் 58 ஆயிரம் இறப்பு சான்றிதழ்கள்தான் கொடுக்கப்பட்டுள்ளன. 33 மாவட்டங்களில் இருந்து தரவுகள் பெற்று இது சரிபார்க்கப்பட்டது. ஆனால், மாநில அரசு 4,218 பேர்தான் கொரோனாவால் இறந்தனர் என கூறுகிறது என்று தெரிவித்தனர்.

நிருபர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த ப.சிதம்பரம், இவ் வருடம் கூடுதலாக வழங்கப்பட்டுள்ள 65 ஆயிரத்து 805 இறப்புச் சான்றிதழ்களுக்கும், கொரோனாவால் நிகழ்ந்ததாக கூறப்படும் 4,218 இறப்புகளுக்கும் உள்ள வித்தியாசம் விளக்கப்பட வேண்டும். இது இயற்கையானது எனக் கூறிவிட முடியாது. இதற்குக் கொரோ னாதான் காரணம். ஆனால், மாநில அரசு கொரோனா இறப்புகளின் உண்மையான எண்ணிக்கையை மறைக்கிறது என்பதில் எங்களுக்கு வலுவான சந்தேகம் உள்ளது.



சில மாநில அரசுகளுடன் சேர்ந்து புதிய நோய்த்தொற்றுகள் மற்றும் கொரோனாப் பலிகள் தொடர்பான உண்மையான எண்ணிக்கையை மத்திய அரசு மறைக்கிறது என்பதில் எங்களுக்கு உறுதியான சந்தேகம் உள்ளது. இது குறித்து மத்திய அரசும், குஜராத் அரசும் நாட்டு மக்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும்! என்று வலியுறுத்தியுள்ளார்.

# கொரோனாத் தடுப்பூசி கொள்முதலுக்கு கோரிக்கை

## தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் விடுத்தது

கொரோனாத் தடுப்பூசிக் கொள்முதலுக்கு உலகளாவிய ஒப்பந்தப் புள்ளியை தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் கோரியுள்ளது.

தமிழகத்தில் தற்போதைய நிலைவரப்படி 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்துவதற்கு போதிய அளவிலான மருந்துகள் இல்லாதமையால் உலகளாவிய ஒப்பந்தப் புள்ளிகள் மூலமாக தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார்.

அதனடிப்படையில் தடுப்பூசிக் கொள்முதலுக்கு தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் ஒப்பந்தப் புள்ளி கோரியுள்ளது. அதில், 90 நாள்களில் 5 கோடி தடுப்பூசிகள் வழங்கத் தயாராக உள்ள நிறுவனங்கள் ஜூன் 5 ஆம் திகதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொரோனா பாதித்தோருக்கு பிளாஸ்மா சிகிச்சையைக் கைவிட இந்திய மருத்துவ ஆராய்ச்சியமைப்பு திட்டம் எனத் தகவல்

கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டோருக்கு அளிக்கப்பட்டு வந்த பிளாஸ்மா சிகிச்சை முறையை கைவிட இந்திய மருத்துவ ஆராய்ச்சியமைப்பு திட்டமிட்டுள்ள தாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொரோனா பாதிப்பு தீவிரமடைந்த ஆரம்ப காலத்தில் பிளாஸ்மா சிகிச்சை முறை மிகவும் பிரபலமாகி வந்தது. கொரோனாவால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோரின் இரத்தத்தில் உள்ள எதிரணுக்களை பிரித்தெடுத்து பாதிக்கப்பட்ட மற்ற நோயாளிகளின் உடலில் செலுத்தி கொரோனா வைரஸுக்கு எதிராக போராட வைக்கும் மருத்துவ முறையே பிளாஸ்மா சிகிச்சை. இந்த நிலையில், கொரோனா சிகிச்சையில் பிளாஸ்மா சிகிச்சை முறை பயனுள்ளதாக உள்ளதா? என்பது குறித்து இந்திய மருத்துவ ஆராய்ச்சியமைப்பின் நிபுணர் குழுவினர் ஆய்வு செய்து வந்தனர்.

அதில் கொரோனா பாதிக்கப்பட்டோருக்கு வைரஸ் பாதிப்பினைக் குறையவைப் பதில் பிளாஸ்மா சிகிச்சை முறையில் போதிய நேர் முடிவுகள் கிடைக்க வில்லை என்பது தெரியவந்துள்ளதாகக் கூறப்படுகிறது.



எனவே கொரோனா பாதித் தோருக்கு பிளாஸ்மா சிகிச்சை முறையை பயன்படுத்துவதை கைவிடுவது பற்றி இந்திய மருத்துவ ஆராய்ச்சியமைப்பு இன்னும் சில நாள்களில் இறுதி முடிவு எடுக்கவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

# ஊரடங்கை மீறி வெளியே வந்தவர்களுக்கு காவலர்கள் ரோஜாப்பூ கொடுத்து அறிவுரை

மதுரையில் முழு ஊரடங்கை மீறி வெளியே சுற்றிய நபர்களுக்கு ரோஜாப்பூக்களைக் கொடுத்து நூதன முறையில் போக்குவரத்து காவல்துறையினர் அறிவுரை வழங்கியுள்ளனர்.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்தும் விதமாக தமிழகத்தில் கடந்த 10 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை ஊரடங்கு அமல்படுத்தப்பட்டு, ஞாயிற்றுக்கிழமை தோறும் முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட் டுள்ளது.

இந்த நிலையில் மதுரை கோரிப்பாளையம் தேவர் சிலை அருகில் ஞாயிற்றுக்கிழமையான இன்று முழு ஊரடங்கு உத்தரவை மீறி இரு சக்கர வாகனங்களில் வெளியே சுற்றிய நபர்களை வழிமறித்த போக்குவரத்து காவல் துறையினர் நூதன முறையில் ரோஜாப் பூக்களைக் கொடுத்து வெளியே சுற்ற வேண்டாம் எனவும், கொரோனா பாதிப்பு குறித்தும் எடுத்துரைத்து வீடுகளுக்கு திரும்பிச் செல்லுமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

# உலகளாவிய ரீதியில் 16.31 கோடியை தாண்டியது கொரோனாத் தொற்று



உலக அளவில் கொரோனா பாதித்தவர்களின் எண்ணிக்கை 16 கோடியைக் கடந்துள்ளது.

நேற்று ஒரே நாளில் உலகம் முழுவதும் 6 லட்சத்து 21 ஆயிரம் பேருக்கு தொற்று ஏற்பட்டது. அதில் இந்தியாவில் மட்டும் 3 லட்சத்து 10 ஆயிரம் பேர் என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்தபடியாக பிரேசிலில் 62 ஆயிரத்து 300 பேரும் உள்ளடங்குவர்.

கடந்த 24 மணி நேரத்தில் பிரேஸிலில் 2 ஆயிரம் பேரும், இந்தியாவில் 4 ஆயிரத்து 100 பேரும் பெருந்தொற்று பாதிப்பினால் உயிரிழந்துள்ளனர். உலக அளவில் இதுவரை 3,383 ஆயிரம் பேர் கொரேனா பாதிப்பினால் கொல்லப்பட்டுள்ளனர்.

இதுவரை உலகம் முழுவதும் 16 கோடியே 31 லட்சம் பேருக்கு பெருந்தொற்று பாதிப்பு இருந்தாலும், இதுவரை 14 கோடியே 25 லட்சம் பேர் குணமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



பயணத் தடைக்கு பின்னர்

## நேற்றைய தினம் இந்தியாவிலிருந்து 80 பயணிகளுடன் முதலாவது விமானம் ஆஸ்திரேலியா சென்றடைந்தது

பயணதடைக்குபின்னர் இந்தியாவில் தவித்த ஆஸ்திரேலியர்களை சுமந்து கொண்டு முதல் விமானம் ஆஸ்திரேலியா போய்ச் சேர்ந்தது.

இந்தியாவில் கொரோனாவின் 2ஆவது அலை காட்டுத்தீயாய்ப்பரவத் தொடங்கியபோது ஆஸ்திரேலியா அதிரடியாக பயணத் தடை விதித்தது.

இதன்படி ஆஸ்திரேலியர்கள், இந்தியாவில் இருந்து தடையை மீறி நாடு திரும்பினால் 5 ஆண்டு வரை சிறையும், 66 ஆயிரம் ஆஸ்திரேலிய டொலர்கள் வரையில் அபராதம் (சுமார் ரூ.37 லட்சம்) விதிக்கப்படும் எனவும் எச்சரித்தது. இது பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது.

ஆனால் இந்த பயண தடை நன்றாக வேலை செய்தது என ஆஸ்திரேலியாவின் பிரதமர் ஸ்காட் மோரீசன் தெரிவித்தார்.

இந்த தடை உத்தரவு முடிவுக்கு வந்த நிலையில் இந்தியாவில் சிக்கித்தவித்த ஆஸ்திரேலியர்களை சொந்த நாட்டில் கொண்டு போய்ச்சேர்ப்பதற்கான முதல் விமானம் தயாரானது.

இதில் 150 பேர் பயணிப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 80 பேர் மட்டுமே பயணித்தனர்.

எஞ்சியவர்களில் பெரும்பாலோர் கொரோனா தொற்று பாதிப்பு உறுதியானதால் பயணிக்க முடியாமல் போய்விட்டது என இந்தியாவுக்கான ஆஸ்திரேலிய தூதர் பேரி ஓ பேரல் தெரிவித்தார். இந்த விமானம் நேற்றய தினம் ஆஸ்திரேலியாவின் டார்வினை சென்றடைந்தது..

முன்னதாக இந்த விமானம் ஆஸ்திரேலியர்களை ஏற்றிச்செல்ல டெல்லி வந்தபோது, ஆஸ்திரேலியாவில் இருந்து 1,056 வெண்டிலேட்டர்கள், 60 ஒக்சிஜன் செறிவூட்டிகள் மற்றும் மருத்துவ கருவிகளை எடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானிஸ்தானில் மசூதியில் குண்டுவெடிப்பு; 12 பேர் மரணம்

ஆப்கானிஸ்தானில் அந்த நாட்டு அரசுக்கும் தலிபான் தீவிரவாத அமைப்புக்கும் இடையே 20 ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது.

இதனிடையே ரமழான் பண்டிகையையொட்டி அங்கு 3 நாள்களுக்கு தலிபான்கள் சண்டை நிறுத்தத்தை அறிவித்துள்ளனர்.

சண்டை நிறுத்தம் அமுலுக்கு வந்த முதல் நாளான வியாழக்கிழமை அன்று குண்டூஸ் மற்றும் காந்தஹார் மாகாணங்களில் நடந்த தொடர் குண்டு வெடிப்புகளில் அப்பாவி மக்கள் 9 பேர் கொல்லப்பட்டனர். இந்த பரபரப்பு அடங்குவதற்குள் நேற்று முன்தினம் தலைநகர் காபூலில் உள்ள ஒரு மசூதியில் தீவிரவாதிகள் குண்டு வெடிப்பை நிகழ்த்தினர்.

காபூலின் கர்தரா மாவட்டத்தில் உள்ள ஒரு மசூதியில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை சிறப்பு தொழுகை நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது மசூதிக்குள் பயங்கர சத்தத்துடன் குண்டு வெடித்து சிதறியது. இதில் அந்த மசூதியின் இமாம் உள்பட 12 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தனர்.



மேலும் 15 பேர் படுகாயம் அடைந்தனர்.

இந்த தாக்குதலுக்கு உடனடியாக எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. அதேசமயம் தலீபான் தீவிரவாதிகள் தாங்கள் இந்த தாக்குதலை நடத்தவில்லை என மறுப்பு தெரிவித்துள்ளனர். முன்னதாக கடந்த வாரம் காபூலில் உள்ள மகளிர் பள்ளிக்கூடம் அருகே நடந்த தொடர் குண்டு வெடிப்பில் ஏராளமான மாணவிகள் உள்பட 90 பேர் கொல்லப்பட்டமையும், 160க்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# காசாவில் ஊடக நிறுவனங்கள் செயல்பட்ட கட்டடம் ஏவுகணை தாக்குதலில் தரை மட்டம்

காசாவில் இஸ்ரேல் நேற்று நடத்திய ஏவுகணை தாக்குதலில், ஊடக நிறுவனங்கள் செயல்பட்ட 12 மாடி கோபுர கட்டடம் கண் இமைக்கும் நேரத்தில் தரை மட்டமானது.

கிழக்கு ஜெருசலேம் நகரில் இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்துக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சினை விஸ்வரூபம் எடுத்து வருகிறது. அரேபியர்கள், யூதர்கள் என இரு தரப்பினரும் சொந்தம் கொண்டாடும் புனித தலத்தில் இருந்து பின் வாங்குமாறு இஸ்ரேலை எச்சரித்த ஹமாஸ் அமைப்பினர், இஸ்ரேல் மீது ரொக்கெட்டுகளை வீசத்தொடங்கினர்.

அதைத் தொடர்ந்து இஸ்ரேலும், பலஸ்தீனத்தின் காசா முனை பகுதியை குறிவைத்து வான்தாக்குதல்களை தொடங்கியன.

ஹமாஸ் அமைப்பினர், இஸ்ரேல் மீது ரொக்கெட் வீச்சு நடத்தினாலும், அந்த ரொக்கெட்டுகளை நடுவானில் மறித்து அழித்து விடும் இஸ்ரேல், ஹமாஸ் அமைப்பினருக்கு கடுமையான பதிலடி கொடுத்து வருகிறார்கள். காசாமுனைப் பகுதியை குறிவைத்து இஸ்ரேல் நடத்துகிற வான்தாக்குதல் மிகக்கொடூர மானதாக இருந்து வருகிறது. இந்த தாக்குதலில் ஹமாஸ் அமைப்பினருடன் 100இற்கும் மேற்பட்ட அப்பாவி மக்களும் பலியாகியுள்ளமையுடன், இந்தப் பலி தொடர்வதும் சர்வதேச சமூகத்தை அதிர வைத்துள்ளது. இந்த நிலையில் நேற்று காசா நகரில் இஸ்ரேல் நடத்திய ஏவுகணை தாக்குதலில், அங்கு அமைந்திருந்த 12 மாடிகளைக் கொண்ட கோபுர கட்டடம் தீப் பிடித்து எரிந்து, இடிந்து தரை மட்டமானது.

இந்த கட்டடத்தில்தான் அசோசியேட்டட் பிரஸ், அல்ஜசீரா உள்ளிட்ட ஊடக நிறுவனங்கள் அமைந்திருந்தன. இந்த கட்டடம் இடிந்த போது அந்தப் பகுதியே புழுதி மண்டலமாக மாறியது. இந்த தாக்குதலை அல்ஜசீரா டி.வி. நேரடியாக ஒளி பரப்பியதாகவும் சொல்லப்படுகிறது.



இந்த கட்டடத்தை குறிவைத்து இராணுவம் தாக்குதல் நடத்துவதற்கு முன்பாக அதில் இயங்கிய ஊடக அலுவலகங்களை சேர்ந்தவர்களையும், குடியிருப்புகளில் வசித்து வந்த மக்களையும் வெளியேறுமாறு இராணுவம் உத்தரவிட்ட பின்னர் இந்த தாக்குதலை நடத்தியதால் உயிர்ச்சேதம் ஏற்பட்டது என தகவல்கள் இல்லை. இருப்பினும் கண்மூடி திறப்பதற்குள் இந்த 12 மாடி கட்டடம் தரை மட்டமானது நேரில் கண்டவர்களை பதைபதைக்க வைத்தது.

இந்த தாக்குதல் குறித்து அசோசியேட்டட் பிரஸ் நிறுவனத்தின் தலைவர் கேரி புரூட் கூறுகையில், இது எங்களை மிகுந்த அதிர்ச்சிக்கும், திகிலுக்கும் ஆளாக்கி உள்ளது.

இந்த கட்டடத்தில் எங்கள் நிறுவனம் இயங்கியதையும், அதில் பத்திரிகையாளர்கள் இருந்தமையையும் அவர்கள் (இஸ்ரேல்) அறிவார்கள். இந்த கட்டடம் தாக்கப்படும் என்பது குறித்து எங்களுக்கு எச்சரிக்கை வந்தது என குறிப்பிட்டார். காசாநகரில் மக்கள் அடர்த்தி நிறைந்த அகதிகள் முகாம் பகுதியில் இஸ்ரேல் வான்தாக்குதல் நடத்தி குறைந்தது 10 பலஸ்தீனியர்களை கொன்றதைத் தொடர்ந்து இந்த தாக்குதலை அரங்கேற்றி உள்ளது.

இதனால் காசாமுனைப் பகுதி பதற்றத்தின் பிடியில் சிக்கி உள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# கொரோனா சவாலை ஒன்றிணைந்து முறியடிப்போம்

## அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அழைப்பு



நாங்கள் நோற்ற நோன்பு நோயெதிர்ப்பு சக்தியாக எங்களுக்கு அமைந்துள்ளது. இந்த காலமகட்டத்தில் இனவாதமாக, பிரதேச வாதமாக கருத்துக்களை தெரிவிப்பதை விடுத்து மக்கள் மிகக்கவனமாக நடந்துகொள்ள வேண்டும். சுகாதார வழிமுறைகளை இறுக்கமாக கடைப்பிடிக்க வேண்டியது நாம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

கடந்த 15 மாதங்களுக்கு மேலாக இதற்காக நாங்கள் போராடி மக்களின் நலனில் எப்போதும் கரிசனையுடன் முன்னெடுப்புக்களை செய்து வருகிறோம். அதனை முறையாக செய்யாத பலருக்கும் எதிராக பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளார்கள்.

இந்தகாலகட்டத்தில்பாதிக்கப்பட்டுள்ள ஏழை மக்களுக்கு உதவ அரசாங்கம் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்தாலும் நாங்களும் ஒரு பொறிமுறையை உருவாக்க ஆலோசித்து வருகிறோம் என அக்கரைப்பற்று மாநகர சபை முதல்வர் அதாஉல்லா அஹமட் ஸஹி தெரிவித்தார்.

இன்று முதல்வர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

பயணக்கட்டுப்பாட்டை விதித்து மக்கள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்று அரசாங்கம் அறிவுறுத்தியும் அதையெல்லாம் மீறி சிலர் தான்தோன்றி தனமாக நடந்துகொள்வதும், அர்ப்பணிப்புடன் இக்காலகட்டத்தில் சேவையாற்றும் பாதுகாப்பு மற்றும் சுகாதார தரப்பினருக்கு இடைஞ்சல் விளைவிப்பதும் கூடாத செயலாகும்.

கொரோனாவை வெற்றிகொள்ள எல்லோரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். சுகாதார வழிமுறைகளை பேணாது வீணாக சுற்றித்திரிந்து நோய்க்காவிகளாக மாறி வீட்டில் உள்ள முதியவர்கள், குழந்தைகள், நோயாளிகளுக்கு தொற்றை நாம் வழங்க கூடாது. நாம் இந்த தொற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அரசுக்கும், பாதுகாப்பு படைக்கும், சுகாதாரத் துறைக்கும் நமது முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

அக்கரைப்பற்று மக்களுக்கு நிறையவே விழிப்புணர்வு அறிவித்தல்களை முன்வைத்து வருகிறோம். அக்கரைப்பற்று உட்பட எமது எல்லா ஊர் மக்களும் கொரோனாவின் முதலாம், இரண்டாம் அலையில் நிறையவே பாடங்களை கற்றுள்ளனர். ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது பரிசோதனையில் எங்களுக்கு நிறையவே நல்ல செய்திகளே கிட்டியுள்ளன.

இருந்தாலும் மக்களை தொடர்ந்தும் சுகாதார வழிமுறைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்திவருகிறோம். எங்களின் பிரதேசத்தில் தொடர்ந்தும் பரிசோதனைகள் நடைபெற்றுக்கொண்டே தான் இருக்கின்றன.

அக்கரைப்பற்றின் மாநகர சபை, பிரதேச சபை, பொலிஸ், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், பாதுகாப்புபடையினர், அரசகாரியாலயங்கள் என நாங்கள் சகலரும் ஒன்றிணைந்து இந்த பிரதேசத்தில் மக்களை பாதுகாக்க அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகிறோம்.

இருந்தாலும் இலங்கை இந்தியாவை அடுத்து மிகப்பெரும் சவாலை எதிர்கொள்ள வேண்டியுள்ளதால் நாங்கள் இறுக்கமாக சுகாதார வழிமுறைகளை பின்பற்ற வேண்டியுள்ளது. சிவப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு செல்வதில் இருந்து நாம் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

மக்களை காப்பாற்ற அரச இயந்திரம் சிறந்தமுறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் அக்கறை செலுத்துவதிலும் பார்க்க மக்களின் சுகாதாரத்தை உறுதிப்படுத்தவே அரசாங்கம் பொறுப்புடன் நடந்து கொள்கிறது என்றார்.

# நோன்புப் பெருநாள் தினத்தன்று அம்பாறையில் கறுப்புக் கொடிகள்

**(பைல் இஸ்மாயில்)**

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளமையைக் கண்டித்தும், அவரை உடனடியாக விடுதலை செய்யக்கோரியும நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப்பினால் அழைப்பு விடுக்கப்பட்டதன் பேரில் முன்னெடுக்கப்பட்ட கறுப்புக் கொடி கட்டும் அமைதி வழிப் போராட்டம் புனித நோன்புப் பெருநாள் தினமான நேற்று முன்தினம் அம்பாறை மாவட்ட பல பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் மற்றும் பல முஸ்லிம் அரசியல் பிரமுகர்கள், மார்க்கத் தலைவர்கள் பலரும் குற்றம் நிரூபிக்கப்படாமல் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளமையைக் கண்டித்தும் நோன்புப் பெருநாள் தினத் தில் சகல முஸ்லிம்களும் தமது வீடுகளில் கறுப்புக்கொடி கட்டி பறக்கவிடுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் பகிரங்க வேண்டுகோள் விடுத்து முதலாவது கறுப்புக் கொடியையும் கட்டி வைத்தார். அதனையடுத்து அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் பொத்துவில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை, நிந்தவூர், சம்மாந்துறை, சாய்ந்தமருது, கல்முனை, நாவிதன்வெளி, நற்பிட்டிமுனை, இறக்காமம், மருதமுனை ஆகிய பிரதேசங்களில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிண்ணியாவில் 12 கிராமசேவகர் பிரிவுகள் முடக்கம்

**(ஹஸ்பர் ஏ ஹலீம்)**

கொவிட்19 தாக்கம் காரணமாக அசாதாரண சூழ் நிலையை கருத்திற் கொண்டு கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல கிராம சேவகர் பிரிவுகளும்கடந்த 14 ஆம் திகதி முடக்கப்பட்டன. கிண்ணியாவில் சுமார் 12 கிராம சேவகர் பிரிவுகள் முடக்கப்பட்ட நிலையில் இன்றைய தினம் வீதிகளில் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் வெறிச்சோடி காணப்படுகிறது.

மக்களை தங்களது வீடுகளில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது .பாதுகாப்பு பிரிவினர் மாத்திரம் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். எனவே தான் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றுமாறும் தேவையற்ற நடமாட்டங்களை தவிர்க்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மருந்தகங்கள் மாத்திரம் திறக்கப்பட்டுள்ளது இது தவிர விவசாயிகள் தங்களது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள வெளியில் செல்ல அனுமதி பத்திரம் கிண்ணியா பிரதேச செயலகம் ஊடாக வழங்கப்படவுள்ளது. முடக்கப்பட்ட பகுதிக்குள் அத்தியவசிய தேவைகளை நடமாடும் சேவை மூலமாக மேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# மட்டக்களப்பில் கடந்த 24 மணி நேரத்தில் 25 கொரோனா நோயாளர்கள் அடையாளம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலத்தில் 25 கொரோனா தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர் என மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பா ளர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்துள்ளார் .

ஓட்டமாவடி சுகாதார வைத்திய பிரிவைச் சேர்ந்த 15 பேரும் மட்டக்களப்பு சுகாதார வைத்திய பரிசோதகர் பிரிவைச்சேர்ந்த 6 பேரும் காத்தான்குடி மற்றும் ஆரையம்பதி சுகாதார பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தலா இரண்டு பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று மரணங்கள் சம்பவித்துள்ளன. இதில் இரண்டு நபர்கள் மட்டக்களப்பு சுகாதார பிரிவு பகுதியையும் ஒருவர் காத்தான்குடி சுகாதார பிரிவு பகுதியையும் சேர்ந்தவர் என தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 1,426 கொரோனா தொற்றாளர்கள் பதிவாகியுள்ளதுடன் 19 மரணங்களும் சம்பவித்துள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வாரத்தில் 171 தொற்றாளர்களும், கடந்த மாதத்தில் 165 தொற்றாளர்களும், கடந்த வருடத்தில் 200 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து சுகாதார பிரிவினரால் மக்களுக்கு பல அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. தேவையில்லாமல் வெளியில் நடமாடுதலை குறைக்குமாறும், பயணத்தடைகளை பின் பற்றுமாறும், முகக்கவசம் அணிந்து பயணங்களில் ஈடுபடுமாறும், நோய் அறிகுறிகள் தென்படுமாயின் உடனடியாக சுகாதார பிரிவுக்கு அறிவிக்குமாறும், கூட்டங்கள் மற்றும் நிகழ்வுகளில் கலந்துகொள்வதை தவிர்க்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# வெறிச்சோடியது திருகோணமலை







**(ஹஸ்பர் ஏ ஹலீம் )**

திங்கட்கிழமை அதிகாலை நான்கு மணிவரை அமுலில் உள்ள பயணத் தடை காரணமாக திருகோணமலை மாவட்டமும் மக்கள் நடமாட்டமின்றி இன்றும் (16) வெறிச்சோடிக் காணப்படுகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பந்தைச் சேதப்படுத்தியது பந்துவீச்சாளர்களுக்கும் தெரியும்



## ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் பன்கிராஃப்ட் பேட்டி!

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி கடந்த 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கேப்டவுனில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியின்போது பந்தை சேதப்படுத்திய சர்ச்சையில் சிக்கியது.

அந்த அணியின் இளம் துடுப்பாட்ட வீரரான கமரூன் பன்கிராஃப்ட் விதி முறைகளுக்கு முரணாக பந்தை ஒரு பக்கம் தேய்த்து அதன் தன்மையை மாற்ற முயற்சித்தமை கமரா பதிவின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. பந்து ‘ஸ்விங்’ ஆக வேண்டும் என்பதற்காக அவர் இவ்வாறு செய்தமையும், இதற்கு பின்னணியில் துணைக் கப்டன் டேவிட் வோர்னர் செயல்பட்டமையும், இது விதிமுறைக்கு புறம்பானது என்று அறிந்திருந்தும் கப்டன் ஸ்டீவன் ஸ்மித் அதைக் கண்டுகொள்ளாமல் விட்டமையும் விசாரணைகளில் தெரியவந்தது. அவர்கள் தங்களது தவறைப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டனர்.

இது குறித்து விசாரணை நடத்திய ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை பன்கிராஃப்ட்டுக்கு 9 மாதமும், ஸ்மித் மற்றும் வோர்னருக்கு ஓராண்டும் தடை விதித்தது. ஸ்மித் கப்டன் பதவியையும் இழந்தார். டேவிட் வோர்னருக்கு தேசிய அணியின் பதவிகளை வகிக்க ஆயுட்காலத் தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக பன் கிராஃப்ட் புதிய தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார். தற்போது கவுண்டி கிரிக்கெட்டில் விளையாடுவதற்காக இங்கிலாந்து சென்றுள்ள அவரிடம், ஊடகமொன்றினால் ‘நீங்கள் பந்தை சேதப்படுத்திய யுக்தி அணியின் மற்ற பந்து வீச்சாளர்களுக்குத் தெரியுமா?’ என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர், ‘நிச்சயமாக!’ என்று பதில் அளித்திருக்கிறார்.

‘நான் இவ்வாறு செய்தமை பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். எனவே அனேகமாக அவர்களுக்கு இது தெரிந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை’ என்று அவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால், யார் யாருக்கு தெரிந்திருந்தது என்ற விவரத்தை அவர் வெளியிடவில்லை. அந்த டெஸ்டில் பட் கமின்ஸ், மிட்ச்செல் ஸ்டார்க், நதன் லயன், ஹசில்வுட், மிட்ச்செல் மார்ஷ் ஆகிய ஆஸ்திரேலியாவின் முன்னணிப் பந்துவீச்சாளர்கள் விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பன் கிராஃப்டின் இந்த தகவல்கள் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை, ‘பந்தைச் சேதப்படுத்திய விவகாரத்தில் புதிய தகவல்கள் இருந்தால் தங்களுக்கு அனுப்பலாம். அது குறித்து மீண்டும் விசாரிக்கப்படும்’ என்று கூறியிருக்கிறது. இதனால் இந்தப் பிரச்சினை மீண்டும் கிளறப்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன எனத் தெரிகிறது.

# இத்தாலி ஓபன் டென்னிஸ் தொடர் இறுதிப்போட்டியில் பிளிஸ்கோவா, ஸ்வியடெக்





ரோம் நகரில் நடந்து வரும் இத்தாலி ஓபின் சர்வதேச டென்னிஸ் போட்டித் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் முன்னாள் முதல் நிலை வீராங்கனையான செக்குடியரசின் கரோலினா பிளிஸ்கோவா 6-1, 3-6, 6-2 என்ற செட் கணக்கில் குரோஷியாவின் பெட்ரா மார்டிச்சை வீழ்த்தி, தொடர்ந்து மூன்றாவது முறையாக இறுதிப்போட்டிக்குள் நுழைந்தார்.

மற்றொரு ஆட்டத்தில் பிரெஞ்ச் ஓபின் சம்பியனான போலந்து நாட்டின் இகா ஸ்வியடெக் 7-6 (7-3), 6-3 என்ற நேர் செட்டில் அமெரிக்காவின் கோகோ காப்பை வென்றார்.

சம்பியன் பட்டத்துக்கான இறுதி ஆட்டத்தில் ஸ்வியடெக், பிளிஸ்கோவாவுடன் மோதுகிறார்.





# இத்தாலி ஓபின் டென்னிஸ் தொடர் ஆண்கள் பிரிவு நடாலும் ஜோகோவிச்சும் இறுதிப்போட்டியில்

இத்தாலி ஓபின் சர்வதேச டென்னிஸ் தொட ரில் நேற்று நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டியில் 9 முறை சம்பியனான ஸ்பெயினின் ரபெல் நடால் 6-4, 6-4 என்ற நேர் செட்டில் அமெரிக்காவின் ஒபெல்காவைத் தோற்கடித்து இறுதிப்போட்டிக்குள் நுழைந்தார்.

மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் தற்போதைய சம்பியனும், முதல் நிலை வீரருமான சேர்பியாவின் நோவக் ஜோகோவிச் 6-3, 6-7, 6-2 என்ற செட்களில் இத்தாலியின் லொரென்சோ சொனேகோவை வென்றார். ரபெல் நடாலும் நோவக் ஜோகோவிச்சும் மோதும் இறுதிப்போட்டி ரசிகர்களின் எதிர்பார்ப்பினை அதிகரித்துள்ளது.

# டோக்கியோ ஒலிம்பிக் நடக்குமா? என்பதை தெளிவுபடுத்த வேண்டும்

## போட்டி அமைப்பாளர்களுக்கு ரோஜர் பெடரர் வலியுறுத்தல்

டோக்கியோ ஒலிம்பிக் போட்டி திட்டமிட்டபடி நடக்குமா என்பதை போட்டி அமைப்பாளர்கள் தெளிவுபடுத்த வேண்டும் என்று சுவிட்ஸர்லாந்தின் பிரபல டென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர் வலியுறுத்தியுள்ளார்.

சுவிட்ஸர்லாந்தில் இன்று தொடங்கும் ஜெனிவா ஓபின் டென்னிஸ் போட்டியில் களம் இறங்க இருக்கும் ரோஜர் பெடரர் அதன் பிறகு பிரெஞ்ச் ஓபினிலும் கலந்து கொள்ளத் திட்டமிட்டு இருக்கிறார்.

எல்லாவிதமான கிராண்ட்ஸ்லாம் பட்டங்களையும் வென்றிருக்கும் 39 வயதான பெடரருக்கு இன்னும் ஒலிம்பிக்கில் ஒற்றையர் பிரிவில் தங்கப்பதக்கம் மட்டும் எட்டாக்கனியாக உள்ளது. ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஜூலை 23 முதல் ஓகஸ்ட் 8 வரை ஒலிம்பிக் போட்டியை நடத்த ஏற்பாடு நடந்து வரும் நிலையில், கொரோனா பரவல் காரணமாக பல டென்னிஸ் பிரபலங்கள் ஒலிம்பிக்கில் பங்கேற்பது கேள்விக்குறியாகியுள்ளது. சமீபத்தில் கொரோனாத் தடுப்பூசி செலுத்திக்கொண்ட பெடரர் அளித்த ஒரு பேட்டியில், ‘ஒலிம்பிக்கில் பங்கேற்று சுவிட்ஸர்லாந்துக்காக பதக்கம் வெல்ல வேண்டும் என்பதே விருப்பம். இது என்னை பெருமையடையச் செய்யும் ஒரு விடயம். ஆனால், டோக்கியோ ஒலிம்பிக் போட்டி திட்டமிட்டபடி நடக்குமா, இல்லையா? என்பதை வீர வீராங்கனைகள் உறுதியாக அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். அதைப் போட்டி அமைப்பாளர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

ஜப்பானில் ஒரு தரப்பினர் எதிர்ப்புத் தெரிவித்தாலும் கூட ஒலிம்பிக் போட்டி நடக்கும் என்றே நினைக்கிறேன். ஒரு வேளை தற்போதைய நிலைமையில் அது நடக்காவிட்டால் அதைப் புரிந்து கொள்ளக்கூடிய முதல் நபராக நான் இருப்பேன். கடினமான நிச்சயமற்ற ஒரு தன்மை நிலவுகிறது என்பதை நாங்கள் அறிவோம். ஒரு வீரராக ஒலிம்பிக் போட்டிக்கு பயணிப்பது குறித்து நீங்கள் தான் முடிவு செய்து கொள்ள வேண்டும். டோக்கியோ ஒலிம்பிக்குக்கு செல்ல நிறைய எதிர்ப்பு இருக்கின்றன என உணர்ந்தால், அங்கு போகாமல் இருப்பதே நல்லது. என்னைப் பொறுத்தவரை ஒலிம்பிக்கில் பங்கேற்பேனா, இல்லையா? என்பது தெரியாது. இரண்டு விதமான மனநிலையில் நான் இருக்கிறேன்’ என்று குறிப்பிட்டுள்ளார்.

பெடரர் மட்டுமன்றி, ரபெல் நடால், செரீனா வில்லியம்ஸ் ஆகிய டென்னிஸ் பிரபலங்களும் கொரோனா அச்சம் மற்றும் புதிய கட்டுப்பாடுகள் காரணமாக ஒலிம்பிக்கில் விளையாடுவது குறித்து தாம் இன்னும் உறுதியான முடிவை எடுக்கவில்லை என்று கூறியுள்ளனர்.



# தமிழ் மக்கள் மீதான அரசின் அடக்குமுறையின் அதியுச்சம் முள்ளிவாய்க்கால் நினைவிட அழிப்பு!

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் கண்டனம்

தமிழ் மக்கள் மீதான அடக்கு முறையின் அதியுச்சமான முள்ளிவாய்க்கால் நினைவிட அழிப்பை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

இனப்படுகொலையின் அதியுச்ச துயரமாக எமது உறவுகளைத் தொலைத்துவிட்டு மனத்துயருடன் வாழும் நாம் எம்மக்களை வேரறுக்க இலங்கை அரசால் படிப்படியாக மேற்கொள்ளப்பட்ட தமிழ் மக்கள் இனப் பாரம்பரியம், கட்டுக்கோப்பு மரபுரிமை வாழ்விட காணி உரிமைகள், கல்வி, கலை, பண்பாட்டு விழுமியங்களூடாக சிதைத்து அழித்தொழித்து தமிழ் மக்களின் இருப்பை சீரழித்த இனப்படுகொலையின் உச்சக்கட்டமான யுத்தகாலத்தை நினைவு கூரவும், அதன் வலிகளை எமது இளைய சந்ததிக்குக் கடத்தவும் உரித்துடையவர்கள்.

எமது இரத்த உறவுகள் , என்று ? எந்த நேரத்தில்?, எப்படி? இறந்தனர் என்றறியாது போரின் இறுதி நாளைக் கொண்டு நினைவு கூருகிறோம். அதற்காக முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி முற்றத்தையே நினைவு கொள்கிறோம்.

சிங்கள அரசு காலங்காலமாக திட்டமிட்ட முறையில் தமிழ் இன அழிப்பை நடாத்திக்கொண்டிருக்கிறது. இவ் இன அழிப்பின் ஒரு படிமுறையாக இறுதிப்போரின் போது இனப்படுகொலையை மேற்கொண்டும், பல்லாயிரக்கணக்கானவர்களை காணாமல் போகவும் செய்துள்ளது. அதன் உச்சக்கட்ட இன அழிப்பை 2009 ஆம் ஆண்டு மே 18 வரை நடத்தியது.

இவ்வாறு ஓர் இனத்துக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட அழித்தொழிப்பை கைகட்டி மௌனியாக பார்த்துக்கொண்டிருந்த சர்வதேச சமூகம், நடைபெற்று முடித்த மனித அவலத்தின் பின் கூட இதுவரை ‘ஒரு சர்வதேச நீதியை’வழங்க முன்வராத காரணத்தால் சிறிலங்கா அரசு துணிச்சலாக மீண்டும் மீண்டும் தனது அராஜகத்தை அரங்கேற்றி வருகின்றது.

சர்வதேச நியமங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமையான ‘நினைவேந்தல்’ உரிமையை தொடர்ச்சியாக மறுத்து வருகின்றது. அத்துடன் முள்ளிவாய்க்கால் முற்றத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபியை மனித விழுமியங்களையும் மீறி வெளிப்படையாகச் சேதப்படுத்தப்பட்டதுடன், நினைவு கற் தூபியும் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றது.

எமது உறவுகளை காணாமலாக்கிய சிறிலங்கா அரச படைகள் இன்று எமது கற்தூபிகளைக் கூட விட்டு வைக்கவில்லை. சர்வதேச நீதிப் பொறிமுறையின் கீழ் சிறிலங்கா அரசைப் பாரப்படுத்தாவிடின் இந்நிலையே ஏற்படும் என்பதை ஐ.நாவின் 46 ஆவது கூட்டத் தொடரின் போது எமது அறிக்கைகள் மற்றும் ஐ.நா. ஆணையாளருக்கான கடிதங்களில் சுட்டிக்காட்டியிருந்தோம்.

நினைவேந்தலை மறுத்தலும், நினைவுச்சின்னங்களை அழித்தலும் ஒட்டுமொத்த தமிழ் இனத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற பாரிய மனித உரிமை மீறலாகும்.

இதனை எமது சங்கம் வன்மையாகக் கண்டிப்பதுடன் இந்த விடயத்தில் சர்வதேச சமூகம் இனிவருங் காலத்திலேனும் நேரடியாகத் தலையிட்டு இலங்கை வாழ் தமிழினத்துக்கு நீதியைப் பெற்றுத்தர வேண்டும் என்று மீண்டும் எமது கோரிக்கையை முன்வைக்கிறோம்.

அத்துடன் முள்ளிவாய்க்கால் பொதுக்கட்டமைப்பால் மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் ஆயர்களால் விடுவிக்கப்பட்ட அழைப்பின் பிரகாரம் மே 18 மாலை 6 மணி ஓசையின் பின் அகவணக்கம் செலுத்தி, வீடுகளின் முன் விளக்கேற்றி எமது இனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட, தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற இனவழிப்பை நினைவு கூருவதுடன், அந்நாளில் காலை உணவைத் தவிர்த்து, மதிய வேளையில் உப்பில்லாத முள்ளிவாய்க்கால் கஞ்சியை உங்கள் வீடுகளில் பரிமாறி எமது துயரங்களையும், வடுக்களையும், நினைவுகளையும், வரலாறுகளையும் அடுத்த சந்ததிக்குக் கடத்துமாறு அனைவரையும் வேண்டி நிற்கின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னாரில் நிபந்தனைகளுடன் ‘ஐ’ வேலைத்திட்டம் ஆரம்பம்



மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி ’ஐ’ வேலைத் திட்டத்தின் கீழ் அகலப்படுத்தப்பட்டு காப்பெற் வீதியாக மாற்றப்படும் வேலைத்திட்டம் இடம்பெற்று வருகின்ற நிலையில் நேற்று (சனிக்கிழமை) குறித்த வீதி அமைக்கும் பணிகள் நிபந்தனையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி ‘ஐ’ வேலைத் திட்டத்தின் கீழ் வீதி அகலப்படுத்தப்பட்டு காப்பெற் வீதியாக மாற்றப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் மன்னாரில் இருந்து மன்னார் பொது விளையாட்டு மைதானம் வரையான இந்த வீதி அகலப்படுத்த முடியாத நிலையில், காணப்படுவதால் வீதி அமைக்கும் பணி தாமதமாகி வருகின்றது.

குறிப்பாக வீதி அகலப்படுத்துவதால் சில பிரச்சினைகள் உள்ளன என்று அப்பகுதி மக்கள் தெரிவித்த நிலையில், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மேல் கடந்த வியாழக்கிழமை மாலை உரிய அதிகாரிகளுடன் குறித்த பகுதிக்குச் சென்று பார்வையிட்டமையோடு, அப்பகுதியில் உள்ள மக்களுடன் கலந்துரையாடியுள்ளனர்.

குறிப்பாக குறித்த வீதி அமைக்கும் பணி ஆரம்பிக்கப்படும் போது அப்பகுதியில் உள்ள வீடுகள் சிலவற்றின் மதில் அகற்ற வேண்டிய நிலை காணப்படுகின்றது. மேலும் குறித்த பகுதியில் கழிவு நீர் வடிகான் ஒன்றை அமைத்து வீதியை அகலப்படுத்தி செப்பனிடுமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனும் கலந்து கொண்டிருந்தார். இந்த நிலையில் வீதியின் ஆரம்ப பணிகள் இடம்பெற்றன. எனினும் மக்களின் எதிர்ப்பு காணப்பட்ட நிலையில், மன்னார் நகர சபையின் தலைவர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் அந்தப் பகுதிக்குச் சென்றதோடு, வீதி அபிவிருத்தி பணிகளை உடனடியாக இடை நிறுத்துமாறு கோரிக்கை விடுத்தார்.

குறிப்பாக பயணத்தடை விதிக்கப்பட்ட நேரம் குறித்த வீதி அபிவிருத்தி பணிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபை எவ்வாறு முன்னெடுத்தது என மக்கள் கேள்வி எழுப்பினர்.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மேல் , நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் உற்பட உரிய அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்றனர்.

எனினும் மன்னார் நகரில் இருந்து சுமார் 150 மீற்றர் வரையிலாக பகுதியில் உள்ள மக்கள் இந்த வீதி அபிவிருத்தி பணியின் போது வீதி அபிவிருத்திக்காக ஏற்படும் சேதங்களுக்கான நஸ்டஈட்டை வழங்கி, நடை பாதை மற்றும் கழிவு நீர் வாய்க்கால் போன்றவற்றை அமைத்தே வீதி புனரமைப்பை முழுமைப் படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்ததோடு, மன்னார் மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபை உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

இந்த நிலையில் முதல் கட்டமாக இன்றைய தினம் குறித்த வீதியின் முதல் கட்டமாக வீதி செப்பனிடும் பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டதோடு, ஏனைய பணிகளை நாளை திங்கட்கிழமை காலை மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெறும் கலந்துரையாடலின் பின் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

இதேவேளை, குறித்த வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளின் ஒப்பந்தகாரரால் முன்னெடுக்கப்படும் ’ஐ’ வேலைத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் ஏனைய வீதிகளும் சரியான தர நிர்ணயத்தின் கீழ் அமைக்கப்படவில்லை என்றும், இதனை மேற்பார்வை செய்யும் தொழிநுட்ப கம்பனியும் இவர்களுக்கு ஒத்துழைப்பதாகவும், இதற்கு பொறுப்புக் கூற வேண்டிய வீதி அபிவிருத்தி திணைக்களம் பாராமுகமாக இருப்பதாகவும், பல துறை சார்ந்த வல்லுநர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள போதும் பல ஒப்பந்தகாரர்கள் கருத்தில் கொள்ளுவதாக இல்லை எனவும், சேதமடைந்துள்ள வீதிகள் செப்பனிடப்படுவதால் குறுகிய காலத்தில் இவ்வீதிகள் பழுதடைந்து போனால் மீண்டும் செப்பனிடுவதற்கு எத்தனை தசாப்தங்கள் ஆகின்றது எனத் தெரியவில்லை.

எனவே ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் வீதியை தரமாக செப்பனிடப்பட வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சீரற்ற காலநிலை காரணமாக கொவிட் அதிகரிக்கும் அபாயம்!

## வைத்திய நிபுணர் சுதத் சமரவீர எச்சரிக்கை

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையுடன் கொவிட் பரவல் அதிகரிக்கக் கூடிய அபாயம் உள்ளது என தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், வெள்ளம் உள்ளிட்ட அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு நலன்புரி முகாம்களில் தங்க வேண்டிய நிலை ஏற்படும் நபர்கள் அடிப்படை சுகாதார விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனை கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கக் கூடும். தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்புடன் மரணங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதென்பது இயல்பாகும்.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதனிடையே, கடந்த சில தினங்களாக நாட்டில் மழையுடனான சீரற்ற காலநிலை நிலவுகிறது.

இதனால் பாதிக்கப்படும் மக்கள் நலன்புரி முகாம்களில் தங்க வேண்டிய நிலை ஏற்படலாம். எனினும் இது போன்ற சந்தர்ப்பங்களில் கூட பொது மக்கள் மிக அவதானமாகச் செயற்பட வேண்டும்.

பெருமளவானோர் ஒரு முகாமில் தங்க வேண்டியேற்படும் போது ஒருவருக்கு தொற்று காணப்பட்டால் கூட அது அங்குள்ள சகலருக்கும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும்.

எனவே, முகாம்களில் தங்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும் போது மக்கள் முகக்கவசம் அணிவது கட்டாயம் என்பதோடு, தமது குடும்பத்தாருடன் மாத்திரம் இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# விபத்தில் காயமடைந்த சப் இன்ஸ்பெக்டர் சாவு

*மாத்தளை, மே 16*

*பொலிஸ் வீதித்தடையில் கடமையாற்றிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் விபத்துக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வந்த சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.*

*அசோக உபதிஸ்ஸ எனும் மாத்தளை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய சப் இன்ஸ்பெக்டர் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.*

*கடந்த 21ஆம் திகதி மாத்தளை - கண்டி வீதியின் பலகடுவ பொலிஸ் வீதித்தடையில் கடமையில் இருந்த சந்தர்ப்பத்தில் அவரை வான் ஒன்று மோதி விபத்துக்கு உள்ளாக்கி இருந்தது.*

*அந்த வான் சாரதி அன்றைய தினமே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.05.2021இல் வெளியிடப்பெற்றது.